**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண்.313/2006</u>**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 07 –** ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **07.11.2025** |
| **பெயர்** | **சுரேஷ்பாபு** |
| **த/பெ** | **இராதகிருஷ்ணநாயுடு** |
| **சாட்சி** | **DW2** |

**விசாரணை தொடங்கும் நேரம்–** 12.44. **p.m**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி –</u>**

8. நானும் எனது பெற்றோரும் ஒரே வீட்டில் தான் குடியிருக்கிறோம் என்றால் சரிதான். இந்த வழக்கு குறித்து எனது பெற்றோர்களிடம் கருத்துக்களை பரிமாற்றிகொள்வேனா என்றால் பரிமாற்றி கொள்வேன். இன்று வரை வழக்கு சொத்தில் நான் தான் அனுபவித்து கொண்டு வருகிறேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் வழக்கு சொத்தை 3ம் பிரதிவாதியான அசோக்கிற்கு கிரையம் செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 23.11.2006 ல் கிரையம் செய்த கிரைய பத்திரத்திமான வா.சா.ஆ.2 ஆவணத்தில் பக்கம் 4 ல் சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைத்துவிட்டதாக ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் இடைக்கால மனு எண்.1433/2006 ஒன்று எனது தரப்பில் தாக்கல் செய்து அதன் பெயரில் வழக்கு சொத்தில் நான் பிரவேசிக்கக்கூடாது என்று உத்தரவாகியுள்ளது என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு இருக்கையில், வழக்கு சொத்தை நான் அனுபவித்து வருவதாக இந்த வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, 1982 ல் இருந்து அனுபவத்தில் இருந்து வருகிறேன். வழக்கு சொத்தில் நான் அனுபவித்து வருவதை காண்பிக்க ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கிஸ்து ரசீதுகள் பி.வா.சா.ஆ.9 மற்றும் 10 ஆக தாக்கல் செய்துள்ளேன்.

9. ஆவணங்கள் பி.வா.சா.ஆ.9 மற்றும் பி.வா.சா.ஆ.10 1ம் பிரதிவாதியான ராதகிருஷ்ணன் பெயரில் தாக்கல் ஆகியுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.10 பட்டா எண்.223 யார் பெயரில் உள்ளது என்றால் தெரியாது. வா.சா.ஆ.2 ஆவணத்தில் 2ம் பக்கத்தில் என் தகப்பனார் கிரையம் செய்த பத்திரத்தில் 8வது வரியில் குத்தகைக்கு என 1987 ம் ஆண்டில் 1ம் பிரதிவாதி ராதகிருஷ்ணன் நாயுடுவின் பெயரில் குத்தகை முச்சிலிக்கா ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளது என்றால் 1987 ல் இருந்து 1992 வரை குத்தகை சாந்தகுமாரிக்கு செலுத்தி வந்தேன். அவ்வாறு குத்தகை செலுத்தியதற்கு ஏழுத்து பூர்வமான ரசீதுகள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்துள்ளேன். குத்தகை முச்சிலிக்காவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டி இடைக்கால மனு எண்.237/2011 எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு அது தள்ளுபடி செய்யப்பட்டது என்றும் அதனை எதிர்த்து C.R.P.No.2642/2011 தாக்கல் செய்யப்பட்டு அதுவும் 29.11.2018 ல் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.

10. மேற்சொன்ன உத்தரவில் 4 ம் பத்தியில் எதிரிடை பாத்தியதை இந்த வழக்கில் ஏழாது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது என்றால் தெரியாது. மேற்சொன்ன உத்தரவின் நகலானது வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் நான் தொடர்ந்து தாவா சொத்தை அனுபவித்து வந்ததாக கூறுவதும், குத்தகை செலுத்தியதாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. உண்மையில் நான் வழக்கு சொத்தை அனுபவித்து கொண்டு வந்திருந்தால் வா.சா.ஆ.12 ஆவணத்தின் மூலம் அரசாங்கம் கருவேலம் மரத்தினை வெட்டுவதற்கு வாதிகளுக்கு தான் அறிவிப்பு அனுப்பப்பட்டது எனக்கு எந்தவித அறிவிப்பும் வரவில்லை என்றால் சரிதான். 3ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்தபோது என்னிடம் அசல் கிரைய ஆவணம் இருந்ததா என்றால் இருந்தது பிறகு வாதிகள் வாங்கி கொண்டார்கள். அவ்வாறு என்னிடம் அசல் கிரைய ஆவணம் இல்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வனரோஜம்மாள் சாந்தகுமாரி மீது எனது தக்கப்பானார் மீதும் வழக்கு தொடுக்கும் போது வழக்கிற்காக அசல் ஆவணத்தை என்னிடம் இருந்து பெற்றுக்கொண்டார்கள்.

11. எனது பதிலுரையிலோ அல்லது சாட்சியத்திலோ என்னிடம் அசல் ஆவணம் இருந்ததாகவும் அதனை அவர்கள் பெற்றுக்கொண்டார்கள் என்றும் குறிப்பிடவில்லை என்றால் எனக்கு தெரியாது. எதன்

அடிப்படையில் நான் வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தை ஏற்படுத்தினேன் என்றால் எனக்கு தெரியாது என் பெற்றோர்களை கேட்டால் தான் தெரியும். தாவா சொத்து இன்றைய மட்டும் வாதிகள் பெயரில் தான் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதி தனது பெயரில் பட்டா மாற்றம் ஏதேனும் செய்து கொண்டாரா என்றால் எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதி மிகவும் வசதி படைத்தவரா என்றால் எனக்கு தெரியாது. எனது தந்தையிடம் கிரையம் பெற்றாரா என்ற விவரம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 ஆவணத்தில் வில்லங்கம் ஏற்படுத்த வேண்டும் என மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

**(மேலும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**

**விசாரணை முடியும் நேரம். 1.20 p.m.**